# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 11-04-2022 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) நகராட்சி அலுவலகத்தினுள் இருக்கும் ஜெனரேட்டர் அறையை மாற்றி இரவு காவலர் அறையாக புரைமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 48 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தினுள் இருக்கும் புறக்காவல் நிலையத்தை புரைமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 48 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) குழித்துறை நீதி மன்றம் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 48 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) மார்த்தாண்டம் குலசேகரம் சாலையில் கீழ்பம்மம் பேருந்து நிலையத்திற்கு அருகில் திறந்த நிலையில் காணப்படும் வடிகால் ஒடையில் தடுப்பு சுவர் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 48 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) லாரன்ஸ் டைல்ஸ் அருகில் இருந்து பதிரியா ஹோட்டல் வரையிலான குடிநீர் குழாயில் கண்ரோல் வால்வு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 48 - (5) தீர்மானிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 1</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கல்பாலத்தடி இசக்கியம்மன் கோயில் வரையுள்ள சாலையில் மின்கம்பம் எண்.63 மற்றும் 60-ன் அருகில் தற்பொழுது பெய்த கனமழையின் காரணமாக உடைப்பு ஏற்பட்டு பொது மக்களின் போக்குவரத்து மிகவும் பாதிப்பு அடைந்துள்ளது. இதனை சரி செய்வதற்கான ரூ.36.25 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி 15-வது மான்ய நிதிக்குழு 2020-2021-ன்கீழ் Untied grant திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு மேற்படி இப்பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் திருநெல்வேலி அவர்கள் மூலம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேலும் இப்பணிக்கு 30-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு 30-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றிற்கு தொழில் நுட்ப கலந்தாய்வு செய்யப்பட்டதில் வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி உடையனவாக இருந்தமையால் 4-4-2022 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் திறக்கப்பட்டன அதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் விலைபுத்தகம் இருந்தது மன்றொரு கவரில் ஒப்பந்தப்புள்ளி விலைபுத்தகம் ஒன்றும் இல்லை. எனவே ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டதால் இதனை ஏற்க இயலாது. எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரமன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.2606/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 49 -அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் அமைந்துள்ள ஜகப்நகர் கல் சாலையாக மாற்றுதற்கு ரூ.18.90 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி எண்.3764, நாள் 18-11-2021 மன்ற பொருளின் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதி பெறப்படும் பொழுது சாலையின் மதிப்பீட்டில் வரிவகை செய்யப்பட்ட ஒரு இனம் (C.C 1:4:8) தேவையில்லாத காரணத்தினால் திருத்திய மதிப்பீடு ரூ.13.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் மூலம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேலும் இப்பணிக்கு 30-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றிற்கு தொழில்

நுட்ப கலந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி உடையதாக உள்ளது. மேலும் இபபணிக்கான விலைப்புள்ளி 04-04-2022 அன்று திறக்கப்பட்டது. அதில் விலைப்புள்ளிகள் தவறாக நிரப்பப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அதனை ஏற்க இயலாத காரணத்தினால் பணியின் அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது..

அ.கு.- மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.2605/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 50 -அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (பம்மம் முதல் குழித்துறை நகராட்சி எல்கை முடிவு மற்றும் பேருந்து நிலையம் முதல் கிறிஸ்துராஜா பள்ளி வரை) பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி மேற்குறிப்பிட்ட இடங்களில் பாதுகாப்பு கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கு காவல் துறையினர் மற்றும் பொது மக்கள் விண்ணப்பித்துள்ள காரணத்தினால் இப்பணியினை மேற்கொள்ள ரூ.6,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 22-03-2002 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அதில் எவ்வித ஒப்பந்தப்புள்ளி பெறப்படாததால் மறு ஒப்பந்தப்புள்ளி 30-03-2022 அன்று கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரபெற்றன. மேற்படி ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1) திரு.ற்றி. ஜலால்சிங் — ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்
2) திரு.கே.எப். ரெசிக் — ஒப்பந்தப்புள்ளியை விட (+6.67% அதிகம்)

அ.கு. - மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் திரு.ற்றி. ஜலால்சிங் அவர்கள் ஒப்பந்தப்புள்ளிக்கு இணையான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே வரிசை எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2694/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 51 -அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் உள்ள விளவங்கோடு ஆற்றுக்கடவு சாலையில் கடந்த நவம்பர் மாதம் பெய்த மழையின் போது ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்ததினால் சாலை இரண்டாக பிரிந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. இதனைச் சீரமைப்பதற்கு இரண்டு பக்கமும் கான்கிரீட்டினால் ஆன தடுப்பு சுவர் அமைத்து வண்ணக்கற்கள் பதித்த சாலையாக அமைப்பதற்கு ரூ.16.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.989/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 52 -அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சியின் பயன்பாட்டிலுள்ள E-Governance Leased Line connectivity-க்குரிய இணையதள இணைப்பிற்கான 01-07-2021 முதல் 31-12-2021 முடியவுள்ள காலத்திற்கு பயன்படுத்தியமைக்கான செலவினத்தொகை ரூ.48295+48295= ரூ-96,590/- BSNL நிறுவனத்திற்கு செலுத்திட மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 425/2019/இ1.

**மன்றத்தீர்மான எண். 53 -அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு மற்றும் ஆணையாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள புதிய பிரிண்டர்களுக்குரிய டோனர் காலியான நிலையில் உள்ளது. பொது மக்களுக்கு பிறப்பு, இறப்பு சான்று மற்றும் உரிமக்கட்டணம் போன்றவை நகல் எடுக்க வேண்டியுள்ளது. எனவே கீழ்குறிப்பிட்டுள்ள பிரிண்டருக்குரிய டோனர்கள் வாங்குவதற்கு கூட்டுறவு அச்சகம் மூலம் பெறுவதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

Tonner விபரம்

1) Laser Jet Pro MFP M329 dw - 10 Nos.
2) Epson - 3 Nos.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.180/2007/டி2.

**மன்றத்தீர்மான எண். 54 -அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை, லாறிபேட்டை வந்து செல்லும் வாகனங்களிலிருந்து விற்பனைக்கு வரும் மீன்பெட்டி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் பலன்தரும் மரங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ,பெறப்பட்டுள்ளது.

I. நவீன மீன்சந்தை, லாறிபேட்டை வந்து செல்லும் வாகனங்களிலிருந்து விற்பனைக்கு வரும் மீன்பெட்டி கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

| | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் | சென்றவருட குத்தகை தொகைரூபாய் |
|---|---|---|
| 1. கே.ஜி. உதயகுமார் த.பெ.கே. கங்காதரன், படந்தாலுமூடு | ரூ.60,00,000/- | ரூ.1,10,28,308/- |

II. பலன் தரும் மரங்கள்

| | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் | சென்றவருட குத்தகை தொகைரூபாய் |
|---|---|---|
| 1. எஸ். ஷாஜி கண்ணக்கோடு, மார்த்தாண்டம் | ரூ.33,300/- | ரூ.33,075/- |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.I -ல் குறிப்பிட்ட இனத்திற்கு சென்ற வருட குத்தகை தொகையினை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. வரிசை எண்.II-ல் குறிப்பிட்ட இனத்திற்கு சென்ற வருட குத்தகை தொகையினை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு இனங்களுக்கும் தலா ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளதால் மீண்டும் மறுஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3066/2021/அ2.

**மன்றத்தீர்மான எண். 55 - மார்த்தாண்டட் காய்கறி சந்தையில் புதிய கடைகள் கட்டுவதால் லாறிபேட்டையில் தற்காலிக கடைகள் அமைத்து காய்கறி வியாபாரம் செய்ய ஒட்டு மொத்தமாக பொது ஏலம் விட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15-வது மத்திய நிதி ஆணையம் 2022-2023-ம்ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்துவரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19-07-2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-07-2018 ஆகியவற்றில் சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19-11-2019-ன்படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள்

உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்ததுள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15-வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்கண்டவாறு சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01-04-2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 30-03-2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01-04-2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி :</u>

<u>குடியிருப்பு கட்டடங்கள் (**Residential Building**)</u> **:**

| **பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கான காரணி** |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building) :**

| **வகைப்பாடு** | **உயர்வு செய்வதற்கான காரணி** |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

<u>காலிமனை வரி சீராய்வு :</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்துவரியுடன் சேர்த்து காலிமனைவரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

<u>தன்னிச்சையாக வருடாந்திர சொத்துவரி சீராய்வு :</u>

ஏற்கனவே உள்ள சொத்துவரி/ காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/ காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் குழித்துறை நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண் | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (**Current Liabilities)** |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.50 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை விபரம் | 2.76 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 1.37 |
| 4 | பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்து வழங்க வேண்டியது | 0.37 |
| | மொத்தம் | 5.00 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.40032/2012/ஆர், நாள் 01-04-2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், குழித்துறை நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி/ காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிககாக பொருள் வைக்கப்படுகிறது.

1) **600** சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

5) வணிகப் பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி/ காலிமனைவரியில், ஆண்டு தோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத் மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/ காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.582/2021/அ1.

<u>**மன்றத்தீர்மான எண். 56**</u>

**13 நகர்மன்ற உறுப்பினர்கள் வரிஉயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். நகர்மன்ற தலைவர் உட்பட 8 நகர்மன்ற உறுப்பினர்கள் வரிஉயர்வுக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் வரிசீராய்வு தொடர்பாக அரசின் மறுபரிசீலனைக்கு மன்றம் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது**.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 29-04-2022 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) தமிழக முதல்வராக 5 முறை பதவி வகித்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவாக மார்த்தாண்டம் பஸ்நிலையத்தில் டாக்டர் கலைஞர் நுழைவு வாயில் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   **மன்றத்தீர்மான எண். 57 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) மார்த்தாண்டம் பஸ்நிலையத்தினுள் கடந்த காலத்தில் அனைத்து பேருந்துகளும் வந்து சென்றதை போன்று தற்போதும் திருவனந்தபுரம் நாகர்கோவில் பேருந்து உட்பட அனைத்து பேருந்துகளும் பஸ்நிலையம் வந்து செல்ல போக்குவரத்து துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   **மன்றத்தீர்மான எண். 57 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) குழித்துறை சந்திப்பில் பொதுமக்கள் தேசிய நெடுஞ்சாலையை கடந்து செல்வதற்கு வசதியாக போக்குவரத்து குறியீடு அமைக்க தேசிய நெடுஞ்சாலை துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   **மன்றத்தீர்மான எண். 57 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) குழித்துறை வி.எல்.சி.திருமண மண்டபம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி புதுமண்டபம் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

   **மன்றத்தீர்மான எண். 57 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) திருத்துவபுரம் மெயின் ரோட்டிலிருந்து காட்டுவிளைக்குச் செல்லும் சாலையில் வலதுபுறத்தில் விஸ்வாசம் கார்டன்ஸ் என்ற இடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாலையை சீர் செய்து புதிதாக குடிநீர் குழாய் அமைத்து தெருவிளக்கு வசதி செய்து புதிதாக காங்கிரீட் சாலை அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 58 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) கல்லுக்கெட்டியில் திரு. எபனேசர், திருமதி. சுஜா, திரு. நேசமணி, திரு. தாசன் இவர்களுடைய வீட்டிற்கு அருகில் நிற்கும் மின்கம்பங்களில் புதிதாக சோடியம் விளக்கும், ராஜீவ் நகரில் திரு. ஜோஸ், திரு. சேதுராமன், திரு. ஸ்ரீனிவாசன் இவர்களுடைய வீட்டின் அருகில் நிற்கும் மின்கம்பங்களில் புதிதாக சோடியம் விளக்கும் அமைத்துத்தரவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 58 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.T.R. ஜெயந்தி கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) ரமேஷ் வீடு முதல் மணிகண்டன் வீடு வரை மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 59 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) வைச்சராரோடு முடிவில், தோமஸ் வீடு முதல் லாரன்ஸ் வீடு வரை மழைநீரில் ரோடு பழுதடைந்துள்ளதால் கான்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 59 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) உண்டனாகுழி, கிருஷ்ணன்கோவில், பக்கம் ஓடை சரி செய்து சிலாப் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 59 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) பெருங்குளம் முதல் படப்பறை செல்லும் சாலை பழுதடைந்ததால் அதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 59 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லு. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) வண்ணாரத்துவிளையிலிருந்து பெருங்குளம் செல்லும் சாலையில் பக்கச்சுவர் கட்டி சாலையை காங்கிரீட் சாலை அமைத்திட மன்றம் தீர்மானித்தல்.

**மன்றத்தீர்மான எண். 60 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) தேவர்குளத்திலிருந்து ஒலிவ் சிமென்டு கட்டை தொழில்கூடம் செல்லும் சாலையின் தொடக்கத்தில் நிற்கின்ற மின்கம்பத்தில் தெருவிளக்கு போட மன்றம் தீர்மானித்தல்.

**மன்றத்தீர்மான எண். 60 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) இடைவிளாகத்திலுள்ள குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கிணற்றிலிருந்து ஒரு இரும்பு பைப் லைன் சுபாஷ் வீட்டின் பக்கத்திலுள்ள சின்டைக்ஸ் டாங்கில் தண்ணீர் வருகிறது. அந்த இரும்பு பைப் மாற்றி பி.வி.சி.பை பதிக்குமாறு இம்மன்றம் தீர்மானித்தல்.

**மன்றத்தீர்மான எண். 60 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) வெட்டுக்காட்டிலிருந்து மணிச்சன் விளை சி.எஸ்.ஐ. சபைக்கு செல்லும் ரோட்டிலுள்ள மின்கம்பங்கள் நடுப்பகுதியில் நிற்கிறது. அதை சாலையோரம் மாற்றிப்போட இம்மன்றம் தீர்மானித்தல்.

**மன்றத்தீர்மான எண். 60 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.V.</u> விஜு <u>கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) நகராட்சி சுடுகாட்டில் மின்சார தகனமேடை அல்லது L.P.G. யிலான தகன மேடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 61 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) சிவன்கோவில் முதல் தபால்நிலையம் சந்திப்பு வரையிலான ஓடையில் சிலாப் (மூடி) அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 61 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) கல்பாலதடி ராஜன் டீகடை அருகில் உள்ள மின்கம்பத்தில் (62) புதியதாக மின்விளக்கு போடுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 62 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) தாலுகா அலுவலகம் அருகில் அரசு பெண்கள் நடுநிலைப்பள்ளி அருகில் உள்ள மின்கம்பத்தில் புதியதாக மின்விளக்கு போடுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 62 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) நரின்விளை சர்ச் அருகில் உள்ள ஓடை தற்போது மண் நிரம்பி பல இடங்களில் ஓடை உடைந்து உள்ளது. சர்ச் முதல் நீதிமன்ற வரை ஓடை மண் அகற்றி புதியதாக ஓடை கட்டி சிலாப் போடுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 62 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) பெருந்தெரு திரு. ஈஸ்வரமூர்த்தி வீடு அருகிலிருந்து பெருந்தெரு அரசு சுகாதார நிலையம் வரை உள்ள ஓடை சரி செய்து சிலாப் போடுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 62 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

**9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்**

1) கல்லுக்கெட்டி - மாவீடுவிளை சாலையில் கான்கிரீட் தளம் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 63 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) விளவங்கோடு - செக்காலத்தெரு சாலையில் திரு. ஜெயரமேஷ் வீட்டின் எதிர்புறம் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு தெருவிளக்கும், திரு. சுனில்குமார் வீட்டின் அருகாமையில் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு தெருவிளக்கும், திரு. கலைச்செல்வன் வீட்டின் அருகாமையில் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு தெரு விளக்கும் சேர்த்து 3 தெருவிளக்கு போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 63 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) தண்ணீர் குழாய் பழுது ஏற்படும்பொழுது அவசரமாக சரி செய்ய வேண்டியுள்ளதாலும், அவசரமாக ஓடைகள் சரி செய்யவும், சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை அவசரமாக நிரப்பவும், அவசர அவசியத்தை முன்னிட்டு ஒரு மினி JCB அல்லது மினி Hitachi வாங்கவும், அதற்கென ஒரு ஒட்டுநர் நியமனம் செய்யவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 63 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) நகர்மன்ற உறுப்பினர்கள் அலுவலகம் வந்தால் உட்காருவதற்கும், மனு எழுதுவதற்கும், பொதுமக்களை சந்திக்கவும் ஒரு அறை கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 63 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

**11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.J.K. றோஸ்லெட் கொண்டு வரும் தீர்மானம்**

1) 11-வது வார்டில் சாலியன்விளை முதல் கண்ணக்கோடு வரை உள்ள மழைநீர் ஒடைகளை தூர்வாரி சிலாப் போட்டு தர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 64 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) 11-வது வார்டில் போர்கால அடிப்படையில் காஞ்சினிகடவு இடத்தை சீரமைக்க வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 64 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) 11-வது வார்டில் கிருஷ்ணன்கோவில் முதல் இலட்ச்சி கோவில்-க்கு இடைப்பட்ட பகுதியில் திரு. அற்புதகுமார், ராஜேஷ் (SRM) தினேஷ், கவிதா மற்றும் கோபால் அவர்களின் வீட்டின் முன்பகுதியில் அமைந்துள்ள மின்கம்பத்தில் புதிதாக தெருவிளக்கு அமைத்து தர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 64 - (3) தீர்மானிக்கப்பட்டது**

**13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.T.S.. பெர்லின் தீபா கொண்டு வரும் தீர்மானம்**

1) பந்நியாணி அர்ஷா ரித்தியின் வீட்டினருகில் உள்ள திருப்பத்தில் இருள்சூழ்ந்து இரவு நேரங்களில் பொதுமக்கள் நடந்து செல்ல சீரமமாக உள்ளதால் புதிதாக ஒரு மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 65 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) தேவன்விளையில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைத்திட்ட குழாயிலிருந்து பொதுமக்கள் இரவு நேரங்களிலும் குடிநீர் எடுப்பதற்கு ஏதுவாக மின்விளக்கு ஒன்றை புதிதாக அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 65 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) பழுதடைந்துள்ள மின்கம்பங்களை மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(1) தேவன்விளை அழகுராஜா அவர்களின் வீட்டின் முன் உள்ள மின்கம்பம்

(2) தேவன்விளையில் அமைக்கப்பட்டுள்ள பி.23 எண் கொண்ட மின்கம்பம்

(3) பந்நியணி சந்திப்பில் உள்ள மின்கம்பம்

(4) பந்நியணி திருமதி. பொன்னம்மா அவர்களின் வீட்டினருகே அமைக்ப்பட்டுள்ள மின்கம்பம்.

**மன்றத்தீர்மான எண். 65 - (3) தீர்மானிக்கப்பட்டது**

**<u>15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரீகன் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 15-வது வார்டு ஜார்ஜ் ஸ்டிபன் என்பவர் வீட்டின் முன்பாதையில் தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 66 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) 15-வது வார்டு பூவாச்சி என்பவர் வீட்டின் முன் பாதையில் தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 66 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) 15-வது வார்டு மார்த்தாண்டத்திலிருந்து அட்டைக்குளம் வரும் ஒருவழி சாலை தொடங்குகின்ற வழியில் முட்டைக்கடை முன் தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 66 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) 15–வது வார்டு நெடும்புறத்துவிளை திரு. நேசையன் போலீஸ் வீட்டின் முன் பகுதியில் தொடங்கி எதிர்புறம் குமார் வீட்டின் முன் வந்தடைகின்ற

கழிவு நீர் ஒடையை குறைந்த பட்சம் 1 அரை அடி அகலமாவது அகலப்படுத்தி காங்கிரீட் ஒடையுடன் கூடிய மூடி அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 66 - (4) தீர்மானிக்கப்பட்டது**

## 16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) APJ நகர் செல்லும் சாலை பழுதடைந்து உள்ளதால் NTC டிப்போ பின்புறம் வரை தார்சாலை அமைத்து சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 67 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) APJ நகர் அசோக்குமார் வீடு முதல் மேற்கு நோக்கி NTC டிப்போ பின்புறம் வரை உள்ள 4 மின்கம்பங்களில் C.F.L. விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 67 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) தேசிய நெடுஞ்சாலை S.B.I. மார்த்தாண்டம் கிளை முன்பக்கம் வடிகால் ஒடை மீது அமைக்கப்பட்டுள்ள உள்ள கிரில் பழுதடைந்து உள்ளது சரி செய்து கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 67 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) மார்த்தாண்டம் தேவி தியேட்டர் சந்திப்பில் உள்ள கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்து இரும்பு வலையை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 67 - (4) தீர்மானிக்கப்பட்டது**

## 18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.P. ஜலிலா ராணி கொண்டு வரும் தீர்மானம்

1) 18-வது வார்டு சிங்களேயர்தெரு அழகன்விளையில் காணும் மின்கம்பங்களில் மின்விளக்கு போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 68 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) .சிங்களேயர் தெரு தொடங்கி கண்ணக்கோடு வரையுள்ள சாலையில் காணும் அவலநிலை மாற்றி சாலையை சீரமைத்து செப்பனிட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 68 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) மெயின்தெருவில் ரெத்தினா பேப்பர் கடைக்கு அருகில் காணும் தெரு (திரு. தம்பி சுரேஷ்) வீடு போகும் தெரு "பேவர் பிளாக்" போட்டு தெருவை சீரமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 68 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) பி.ஒ.சி. தெரு (Near ஐசக் ஆஸ்பத்திரி) சாலையை பழுது பார்த்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 68 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) பி.ஒ.சி.தெரு திருமதி. நிர்மலா வீடு அருகில் "சின்டக்ஸ்" வைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 68 - (1) தீர்மானிக்கப்பட்டது**

**<u>21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) சிறியகாட்டுவிளை சானல்ரோடு மணி அவர்கள் வீட்டின் முன்பக்கம் மின்கம்பம் அமைத்து C.F.L. மின்விளக்கு அமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 69 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) சானல்ரோட்டில் உள்ள 7 மின்கம்பங்களில் உள்ள குழல்விளக்கு மாற்றி C.F.L. மின்விளக்கு அமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 69 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) கீழ்பம்மம் சந்திப்பில் வடிகால் ஒடையில் குறுகலான கல்வெட்டு உள்ளதால் மழைகாலங்களில் வடிகால் ஒடை அடைபட்டு உள்ளது. இதனால் கல்வெட்டை மாற்றி அமைக்க நெடுஞ்சாலை துறையை கேட்டு மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 69 - (3) தீர்மானிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 1</u>**

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள கீழ்கண்ட எழுது பொருட்கள் காலியான நிலையில் உள்ள காரணத்தால் அவசரம் கருதி கூட்டுறவு அச்சகம் மூலம் பெறுவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | Measurement Book | - 100 Page | - 100 Nos. |
| 2) | Measurement Book | - 75 Page | - 100 Nos. |
| 3) | Measurement Book | - 50 Page | - 100 Nos. |
| 4) | Measurement Book | - 25 Page | - 100 Nos. |
| 5) | Log Book | - 100 Page | - 100 Nos. |
| 6) | சொத்துவரி விதிக்கக்கோரும் விண்ணப்பம் | | - 1000 Nos. |
| 7) | சொத்துவரி பெயர் மாற்றம் விண்ணப்பம் | | - 1000 Nos. |
| 8) | பிறப்பு சான்று திருத்தம் விண்ணப்பம் | | - 1000 Nos. |
| 9) | Chitta Book | | - 10 Nos. |
| 10) | Toner 30A | | - 20 Nos. |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.180/2007/டி2.

**மன்றத்தீர்மான எண். 70 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 2</u>**

இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.எஸ். பாபு பெயரில் ஒப்பந்தப்பணி செய்த வகையில் காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் ரூ.1,61,002/- உள்ளது அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- அனுமதிக்கலாம்
ந.க.எண்.336/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 71 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு விநாயகர்கோவில் சமீபம் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு ரூ.1.10 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ள 12-04-2022-ல் மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.T. Regu, | மதிப்பீட்டை விட (+) 22.71% அதிகம் |
| 2. | திரு.A. Antony, | மதிப்பீட்டை விட (+) 45.08% அதிகம் |

மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. எனவே மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
அ.கு.- மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3064/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 72 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்டு தீர்மானிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நகராட்சியில் உள்ள நான்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் இருந்து குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர்

வினியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய் (Distribution Main) நீர்தேக்க தொட்டிகளுக்கு Filter house சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து Pumping Line மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் சீராக பொதுமக்களுக்கு வினியோகம் செய்ய பராமரிப்பு தொகை ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 12-04-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.P Jaya Prakash, | மதிப்பீட்டை விட (-) 0.13% Less (517460.00) |
| 2. | திரு.P. Jayachandran, | மதிப்பீட்டை விட (-) 0.07% Less (517760.00) |

மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.13% குறைவாக (ரூ.517460.00) கொடுத்துள்ள திரு.P Jaya Prakash என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3046/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 73 - அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நகராட்சியில் உள்ள நான்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் இருந்து குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய் (Distribution Main) நீர்தேக்க தொட்டிகளுக்கு Filter house சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து Pumping Line மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வீணாகதவாறு வினியோகம் செய்ய ரூ.6.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 12-04-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

<u>வ.எண்</u> <u>ஒப்பந்ததாரர் பெயர்</u> <u>ஒப்பந்த விகிதம்</u>

1. திரு.P Jaya Prakash, மதிப்பீட்டை விட (-) 0.13% Less (517460.00)

2. திரு.P. Jayachandran, மதிப்பீட்டை விட (-) 0.07% Less (517760.00)

மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.13% குறைவாக (ரூ.517460.00) கொடுத்துள்ள திரு.P Jaya Prakash என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**3047/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 74 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சி வார்டு எண்.1 முதல் 21 வரையுள்ள தெருவிளக்குளை பராமரிப்பதற்கு தனியார் ஒப்பந்ததாரர் கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு பணி நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. ,இப்பணிக்கான நீட்டிப்பு காலம் 30-04-2022 உடன் முடிவடைகின்றது. எனவே மேலும் இரண்டு மாதங்களுக்கு 5/2022 முதல் 6/2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து பணியினை அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**31140/2020/இ1.

**மன்றத்தீர்மான எண். 75 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சி வார்டு எண்.5-ல் அமைந்துள்ள கழுவன்திட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு எதிர்புறம் அமைந்துள்ள குறுக்கு தெருவில் சுமார் 10 குடும்பங்கள் வசித்து வருகின்றது. இங்குள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் வெளியே செல்ல வழிவகை எதுவும் இல்லாத காரணத்தினால் கழிவுநீர் தொட்டி ஒன்று அமைத்து அதிலே கழிவுநீர் சேகரமாகின்றது. இதிலிருந்து கழிவுநீரை அருகிலுள்ள ஓடையில் கடத்துவதற்கு

ஒரு 1 H.P. Motor அமைத்து குழாயின் மூலம் கழிவுநீரை வெளியேற்றுமாறு நகர்மன்ற உறுப்பினர் திரு.செ. ஆட்லின் கெனில் கோரிக்கை விடுத்துள்ளார். அதன்படி கழிவுநீரை வெளியேற்றுவதற்கென ரூ.48,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.31140/2020/இ1.

**மன்றத்தீர்மான எண். 76 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 8</u>**

குழித்துறை நகராட்சி வார்டு எண்.1-ல் அமைந்துள்ள ஜேக்கப் நகர் முதல் நரியன்விளை சாலை மற்றும் வார்டு எண்.7-ல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கல்பாலத்தடி இசக்கியம்மன்கோயில் வரையுள்ள சாலை சரி செய்வது தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் மாலை மலர் நாளிதழ் மற்றும் தினமலர் நாளிதழில் பட்டியல் தொகை வழங்க அனுமதிக்கலாம்.

1) ரூ.9912/- மாலை மலர்
2) ரூ.13,356/- தினமலர்

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2605/2021/இ1., ந.க.எண்.2606/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 77 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 9</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் 15-வது நிதிக்குழு மானியத்தில் Tied Grant 2021-2022-ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ரூ.34.00 இலட்சம் மதிப்பீ,ட்டில் புதிதாக 4 Ton Capacity கொண்ட Micro Compost

அமைக்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் ரூ.11,718/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3067/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 78 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து அரசு பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு உள்ளாட்சி பிரதிநிதிகள் இரண்டு உறுப்பினர்கள் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றி விவரம் தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.வ2/2827/2020, நாள் 22-04-2022-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இரண்டு நகர்மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.664/2022/இ1.

**மன்றத்தீர்மான எண்.79 - பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களாக 6-வது வார்டு உறுப்பினர் திரு.வி. விஜீ அவர்களும், 16-வது வார்டு உறுப்பினர் திரு.கே. இரத்தினமணி அவர்களையும் தேர்வு செய்து தீர்மானிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

குழித்துறை நகராட்சியில் கீழ்பம்மம் பகுதியில் நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் கட்டுதல் பணிக்கு ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் 21-04-2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழிற்நுட்ப தகுதிக்கு கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழிற்நுட்ப தகுதி பெற்றுள்ளன. அவைகளின் விலைப்புள்ளி 22-04-2022 அன்று திறக்கப்பட்டதின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்வருமாறு.,

1) திரு.டி. ஜஸ்டின்குமார் - 4.98% கூடுதல்

2) திரு- பிரேம்குமார் - 6.83% கூடுதல்

வரிசை எண்.1-ல் திருடி ஜஸ்டின்குமார் மதிப்பீட்டை விட 4.98% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காரணத்தினால் அன்னாருக்கு விலை குறைப்பு செய்து தர கேட்டு கடிதம் 22-04-2022-ல் வழங்கப்பட்டதில் அன்னார் 25-04-2022-ல் விலை குறைப்பு செய்து மதிப்பீட்டை விட 4.87% அதிகமாக வழங்கியுள்ள அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இப்பணி திட்டபணியாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிக்கு LOA வழங்க மதிப்பீட்டில் 1% கூடுதல் வைப்பு தொகை வசூல் செய்த பின் வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3067/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 80 - அனுமதிக்கப்பட்டது**

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 29-04-2022 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தின் உட்பகுதியில் உள்ள காலியிடத்தில் பொது மக்கள் அசுத்தம் செய்வதினால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. மேலும் பேருந்து நிலைய வளாகத்தினுள் மின்விளக்குகள் சரிவர எரியவதில்லை. எனவே பொதுமக்களின் நலன்கருதி காலி இடத்தை சுற்றிலும் இரும்புவேலி அமைக்கவும், மின்விளக்குகளில் புதிதாக LED விளக்குகள் பொருத்தவும் நகர்மன்றத் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்பேரில் ரூ.2.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1241/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 81 - அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சி வார்டு எண்.3-ல் அமைந்துள்ள பஸ்நிறுத்தத்தின் அருகில் உள்ள பொதுக்கழிப்பிடம் ஒன்று பழுதடைந்து காணப்படுவதால் அதனை சீரமைத்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3,42,000/- பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1242/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 82 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் தினசரி காய்கறி சந்தையில் உள்ள பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அகற்றி விட்டு கட்டுவதற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022 நிதியாண்டின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்பணியினை மேற்கொள்வதற்கு தற்போது பழுதடைந்த கடைகளை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. கடைகளை இடித்து அப்புறப்படுத்துவதற்கு ரூ.18.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1243/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 83 - ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் லாறிபேட்டையில் தற்காலிக கடைகள் கட்டி காய்கறி கடைக்காக ஏலத்திற்கு விடப்பட்ட பிறகு பழய கட்டிடத்தை இடிக்க மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் உள்ள குப்பைக்கிடங்கிலிருந்து APJ Nagar செல்லும் சாலையானது (149015R075)குடிநீர் மேம்பாட்டு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொண்டதில் பழுதடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனைச் சீரமைப்பதற்கு ரூ.24.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை 15-வது மான்ய நிதிக்குழு 2020-2021-ன் Untied Grant-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1244/2022/இ1

**மன்றத்தீர்மான எண். 84 - வரும் நிதி ஆண்டில் 15-வது நிதிக்குழு மானியத்தில் இப்பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் காராவிளை (149003S006) சாலையானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் பொழுது பழுதடைந்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு இடையூறாக உள்ளது. இதனைச் சீரமைப்பதற்கென ரூ.6.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை 15-வது நிதிக்குழு மானியம் 2020-2021-ன் Untied Grant-ல் இதனை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1245/2022/இ1

**மன்றத்தீர்மான எண். 85 - வரும் நிதி ஆண்டில் 15-வது நிதிக்குழு மானியத்தில் இப்பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சி பகுதியில் குடிநீர் மேம்பாட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வருகின்றது. இப்பணியின் போது வார்டு எண்.3-ல் உள்ள வண்ணாரத்துவிளையிலிருந்து பெருங்குளம் செல்லும சாலையானது (149003S004) தேசதடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனைச்சீரமைப்பதற்கு ரூ.4.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை 15-வது நிதி மான்யக்குழு 2020-2021-ன் Untied Grant-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1246/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 86 - வரும் நிதி ஆண்டில் 15-வது நிதிக்குழு மானியத்தில் இப்பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சியில் அலுவலகப் பயன்பாட்டிற்கென தற்பொழுது இரண்டு ஈப்பு வாகனங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று வாங்கி 10 வருடங்களுக்கு மேலாகி விட்டது. மேலும் தற்பொழுது நகர்மன்ற தலைவரின் பயன்பாட்டிற்கு புதிய SCORPIO வாகனம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.14.00 இலட்சமாகும். வாகனத்தின் தேவையை கருத்தில் கொண்டு நகராட்சியின் பொது நிதியில் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1247/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 87 - அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் எண். 8**</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தின் முன்பகுதியில் ஜெனரேட்டர் அறை ஒன்று உள்ளது. தற்பொழுது இரவுக்காவலருக்கு தகுதியான அறை ஒன்று இல்லாத காரணத்தினால் அந்த அறையை காவலர் அறையாக மாற்றி வர்ணம் பூசவும், தரையில் tiles பதித்து பராமரிக்க ரூ.1,38,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1248/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 88 - அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 9**</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் உள்ள முத்தாரிணிவிளை சாலையில் நகராட்சி எல்லை வரையுள்ள பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் மழைக்காலங்களில் மழைநீர் வீடுகளுக்குள் உட்புகுந்து பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே மழைநீர் சீராக செல்லும் வகையில் சாலையின் இடதுபுறத்தில் புதியதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கென ரூ.8.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1249/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 89 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10</u>**

இந்நகராட்சி நகர்மன்றத் தலைவர் மற்றும் துணை தலைவர்- சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்ட வகையில் பயணப்படி தலா ரூ.7420/- வீதம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**மன்றத்தீர்மான எண். 90 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினமணி பத்திரிக்கை விளம்பரம் செய்த வகைக்கு ரூ.31,374/- செலவினப்பட்டியல் தினமணி பத்திரிக்கையின் “Express Publication (Madurai) Private Ltd.”, நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

**மன்றத்தீர்மான எண். 91 - அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.